தலைமைக் கழகம் தி.மு.க. சென்னை -18.

**பத்திரிகை செய்தி**

# பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநிலம் தழுவிய "நமக்கு நாமே" என்ற பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

**(6–8–2015)**

**தமிழக வரலாற்றில் இதுவரை காணாத**
**மாபெரும் மக்கள் சந்திப்பு இயக்கமாக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்**
**234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் பயணம் மேற்கொள்கிறார்.**

கடந்த நான்காண்டு கால அ.தி.மு.க. ஆட்சி தமிழக வரலாற்றில் இருண்ட அத்தியாயமாக ஆகியிருக்கிறது. செயல்படாத அ.தி.மு.க. அரசின் காரணமாக மாநில மக்கள் சொல்லொனாத் துயரங்களையும், வாழ்வாதாரப் பின்னடைவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்பின்மை, பெருகி வரும் கடன், தேங்கி நிற்கும் உள்கட்டமைப்புப் பணிகள்– இவை எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து துறைகளிலும் தொலைநோக்குப் பார்வையற்ற செயல்பாடு– இவற்றால் தமிழகம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஐந்து வருடத்தை நிறைவு செய்யப் போகும் அ.தி.மு.க. ஆட்சியில் முன்னேற்றம் என்பது எந்த துறையிலும் எள்ளளவும் இல்லை என்ற அவல நிலை உருவாகி

விட்டது. மாநில முன்னேற்றமும், வளர்ச்சியும் தடைப்பட்டுள்ளதால், பாதிப்புக்குள்ளாகி யிருப்பவர்கள் ஒட்டுமொத்ததமிழக மக்களும், தமிழக இளைஞர்களும்தான்! இந்நிலையில்,தமிழக மக்களின் வாழ்வில் ஒளியேற்ற,தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய மாநில வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபடக் கூடிய ஆக்கபூர்வமான ஓர் அரசை உருவாக்கும் எண்ணத்துடன் தி.மு.க. பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் "நமக்கு நாமே" என்ற இந்தப் "பயணம்" மாநிலம் முழுவதும் மேற்கொள்ளவிருக்கிறார்.

மாநிலத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்து அவர்களது பிரச்சனைகளையும், எதிர்பார்ப்புகளையும் அறிந்து கொள்ள இந்தப் பயணத்தைத் தளபதி மு.க.ஸ்டாலின் வருகின்ற 25.9.2015 அன்று தொடங்குகிறார். அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டிருக்கும் குமரி முனையிலிருந்து அவரது பயணம் தொடங்கி குவலயம் போற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்த மாவட்டமான காஞ்சியில் நிறைவு பெறும். இப்பயணத்தின் போது விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், மகளிர், மாணவர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்தவர்கள், தொழில்புரிவோர், பொறியாளர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என்று சமுதாயத்தின் அங்கங்களாகத் திகழும் அனைவரையும் சந்தித்து அவர்களுடன் தனித்தனியே கலந்துரையாடல் நடத்துகிறார். அவர்களின் விருப்பங்களையும், ஆலோசனைகளையும் கேட்டறிவது மட்டுமின்றி, தமிழக மக்கள் ஒவ்வொருவரும் மாற்றத்திற்கான உந்து சக்தியாகச் செயல்பட வேண்டும் என்பதையும் தளபதி அவர்கள் விளக்கி உரைப்பார்.

234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் செல்லும் வகையில் மூன்று கட்டங்களாகப் பயணத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, இந்த "நமக்கு நாமே" பயணம் இரண்டு மாதங்கள் சிறப்பாக நடைபெறும். இறுதியில் 8.11.2015 அன்று காஞ்சிபுரத்தில் மாபெரும் பேரணியுடன் இந்த "பயணம்" நிறைவு பெறும்.தளபதி

மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களை நேரடியாக சந்திக்கும் அதே வேளையில், பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகள் மற்றும் ஒருங்கிணைந்த செய்தி தொடர்பு சாதனங்கள் மூலம் இந்த பயணத்தின் நோக்கம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுச் செம்மைப்படுத்தப்படும். இதுவரை எந்தப் பயணத்திலும் இல்லாத அளவிற்கு ஏறக்குறைய 4 கோடி மக்களை சந்திப்பதற்கு ஏற்ற விதத்தில் இப்பயணத்தின் நிகழ்ச்சி நிரல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.பயணத்தின் போது தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நகரங்களில் "டவுன் ஹால் கூட்டங்கள்" "திறந்த வெளிக் கூட்டங்கள்"நடத்தி பல்வேறு தரப்பு மக்கள்,பொதுநலச் சங்கங்கள், ஈடுபாடுள்ள அமைப்பினர் ஆகியோரைச் சந்தித்து மாநில நலன் மற்றும் முன்னேற்றம் தொடர்பான பல்வேறு விஷயங்கள் பற்றியும், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றியும் அவர்களுடைய கருத்துக்களை நேரடியாக அறிவார். நடைப்பயணம், சாலையோரக் கூட்டங்கள், கிராமங்களில் பயணிப்பது போன்றவற்றின் மூலம் பெருமளவுக்கு மக்களுடன் கலந்துரையாடல் நடத்தப்படும். களநிலவரம் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து கட்சித் தொண்டர்களைச் சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்கும் தளபதி மு.க.ஸ்டாலின், 2016ல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான பணிகளில் தீவிரமாகவும், தீர்க்கமாகவும்செயல்பட வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தவும், ஊக்குவிக்கவும் இந்தப் பயணத்தைப் பயன்படுத்திக் கொள்வார்.

அதே நேரத்தில் பயணம் மேற்கொள்ளும் வழி நெடுக திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் பொதுமக்களுடன் "மாபெரும் மக்கள் சந்திப்பு" "கலந்துரையாடல்" போன்றவை நடைபெறும். கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டியிருக்கின்ற"பேசலாம் வாங்க நிகழ்ச்சி" போல் திராவிட முன்னேற்ற கழகம் சார்பில்ஒன்றிய அளவில் மக்களைத் திரட்டி அவர்களின் பிரச்சினைகளையும், மதிப்பு மிக்க ஆலோசனைகளையும் கழகத்தினர் கேட்டு அறிவார்கள். இப்படி நடைபெறும் ஒவ்வொரு கூட்டங்களிலும் தெரியவரும் மக்கள் பிரச்சினைகள் மற்றும் மக்களின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை ஒன்று

தொகுக்கப்பட்டு அவை வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின்தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படும். மாநிலத்தைச் சிதைத்துவரும் நிர்வாகச் சீர்கேடு, அ.தி.மு.க. அரசின் நிறைவேற்றப்படாத பல்வேறு தேர்தல் வாக்குறுதிகள் குறித்து வீடு வீடாகக் கழகத்தினர் பிரச்சாரம் மேற்கொள்வார்கள்.அ.தி.மு.க. அரசின் மீதான குற்றப்பத்திரிக்கை வீடுதோறும் கழகத்தின் சார்பில் விநியோகிக்கப்படும். திராவிட முன்னேற்றக் கழகம் தலைவர் கலைஞர் தலைமையில் அளித்த நல்லாட்சி பற்றியும், ஆட்சியின் சாதனைகள் பற்றியும் மக்களிடம் எடுத்துக் கூறி, இனி 2016–ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் போது என்ன மாதிரியான செயல்பாடுகளை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பது பற்றிய கருத்துக்கள் பெறப்படுவதுடன், எவ்வகையான திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என கருதுகிறார்கள் என்பது பற்றியும் மக்களின் ஆலோசனைகளைப் பெறும் வகையில் இந்த எழுச்சிப் பயணம் அமையும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அனைவரும் இந்த “நமக்கு நாமே” பயணத்தை மாபெரும் வெற்றிப் பயணமாக மாற்றுவதற்கு உணர்வொன்றி உழைப்பார்கள். இந்த பிரம்மாண்டப்பயணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் அனைத்து ஏற்பாடுகளையும் அதற்கென்று அர்ப்பணிப்புடன் செயல்படும் குழுவும், கட்சி நிர்வாகிகளும் மேற்கொள்வார்கள். இந்தச் சீர்மிகு பயணத்திற்கு இடையிடையே அதுவரை மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் சிறப்பம்சங்கள் வெளியிடப்படும்.

அ.தி.மு.க. ஆட்சியினால் இழந்தவிட்ட தமிழகத்தின் அருமை பெருமைகளை மீட்டெடுக்க வருகின்ற செப்டம்பர் 25–ஆம் தேதியன்று கன்னியாகுமரியிலிருந்து தளபதி மு.க.ஸ்டாலின் “நமக்கு நாமே” பயணம் தொடங்குகிறார்!

***